www.freetnbooks.com

V6M

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 6

கணிதம்

காலஅளவு: 2.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 60

பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்வு செய்க** 5×1=5

1) பின்வரும் எண்களில் எது பகா எண் அல்ல?
   a) 53 b) 92 c) 97 d) −71

2) 8, 9 மற்றும் 12 ஆகிய எண்களால் வகுபடும் மிகப்பெரிய 4 இலக்க எண் என்ன?
   a) 9999 b) 9996 c) 9696 d) 9936

3) 3 வாரங்கள் = ……….. நாள்கள்
   a) 21 b) 7 c) 14 d) 28

4) இலாபமும் இல்லை, நட்டமும் இல்லை எனில்,
   a) அடக்கவிலை = விற்பனை விலை b) அடக்கவிலை > விற்பனை விலை
   c) அடக்கவிலை < விற்பனை விலை d) குறித்தவிலை = தள்ளுபடி

5) சமபக்க முக்கோணம் ஆனது ஒரு ……………. ஆகும்.
   a) விரிகோண முக்கோணம் b) செங்கோண முக்கோணம்
   c) குறுங்கோண முக்கோணம் d) அசமபக்க முக்கோணம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** 5x1=5

6) 3753 என்ற எண்ணானது 9 ஆல் வகுபடும். ஆகையால் அவ்வெண் ………… ஆல் வகுபடும்.

7) 250 மி.லி + $\frac{1}{2}$ லி = …………லி

8) 2 நாள்கள் = ………. மணி

9) தள்ளுபடி = குறித்தவிலை − …………

10) ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல் ………..

**III. சரியா/தவறா:** 5x1=5

11) ஒவ்வொர் இயல் எண்ணும் பகா எண்ணாகவோ அல்லது பகு எண்ணாகவோ இருக்கும்.

12) 17 மற்றும் 18 ஆகிய எண்களின் மீ.பெ.கா 1 ஆகும்.

13) புகழேந்தி 100 கி வேர்க்கடலை சாப்பிட்டான். அது 0.1 கி.கிக்குச் சமம்.

14) 'கூடுதல் செலவுகள்' எப்போதும் விற்பனை விலையில் அடங்கியுள்ளது.

15) இருசமபக்க முக்கோணத்தில் இரண்டு கோணங்கள் சமம்.

**IV. பொருத்துக:** 5x1=5

| | |
|---|---|
| 16) 11 : 50 | - 1 லி |
| 17) 600 மி.லி + 400 மி.லி | - 8 மணிக்கு 15 நிமிடங்கள் |
| 18) 07 : 45 | - விரிகோண முக்கோணம் |
| 19) ஏதேனும் ஒரு கோணம் விரிகோணம் | - அசமபக்க கோணம் |
| 20) அனைத்துப் பக்கங்களும் வெவ்வேறானவை | - 12 மணிக்கு 10 நிமிடங்கள் |

**V. ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி:** 6x2=12

21) வகுத்தல் முறை மூலம் பகாக் காரணிப்படுத்துக: 144

22) இரு எண்களின் மீ.சி.ம 432 மற்றும் அவற்றின் மீ.பெ.கா 36. ஓர் எண் 108 எனில் மற்றொரு எண் என்ன?

23) தமிழகத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 998 மி.மீ இதனைச் செண்டி மீட்டரில் மாற்றுக.

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com




24) கீழ்க்காண்பனவற்றை 24 மணி நேர அமைப்புக்கு மாற்றுக

(i) 3.15 மு.ப　　b) 12.00 நள்ளிரவு

25) 6 மு.ப மற்றும் 4 பி.ப - இக்கு இடைப்பட்ட கால இடைவெளியைக் காண்க.


26) இராணி ஒரு சோடி வளையல்களை 310க்கு வாங்கினார். அவருடைய தோழி அதை மிகவும் விரும்பியதால் இராணி அவ்வளையலை 325 க்கு விற்கிறார் எனில் இராணியின் இலாபம் அல்லது நட்டம் காண்க.

27) பின்வரும் முக்கோணங்களைப் பக்கங்கள் மற்றும் கோணங்களின் அடிப்படையில் வகைப்படுத்துக.




28) $80^{\circ}$, $30^{\circ}$, $40^{\circ}$ ஆகிய கோண அளவுகளைக் கொண்டு ஒரு முக்கோணம் அமைக்க இயலுமா?

29) மரவுரு வரைபடத்தை எண் கோவையாக மாற்றுக.




## VI. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி: 6x3=18

30) முழுவதுமாக நிரப்பப்பட்டுள்ள 80 லிட்டர், 100 லிட்டர் மற்றும் 120 லிட்டர் கொள்ளளவு உள்ள கலன்களில் பாலினைச் சரியாக அளக்கக்கூடிய பாத்திரத்தின் அதிகபட்சக் கொள்ளளவு என்ன?

31) கொடுக்கப்பட்ட எண்களை வகுபடும் தன்மை விதிகள் மூலம் 2, 3, 4, 5, 6, 8, 9 10 மற்றும் 11 ஆகிய எண்களால் வகுபடுமா என ஆராய்க

i) 68　　ii) 99　　iii) 300

32) 2 லி கொள்ளளவுள்ள சாடியில் தண்ணீர் நிரப்பக் கீழ்காணும் கொள்ளளவுகளில் உள்ள குவளைகளில் எத்தனை முறை தண்ணீர் ஊற்ற வேண்டும்?

i) 100 மி.லி　　ii) 500 மி.லி　　iii) 250 மி.லி

33) மலரின் பிறந்த நாள் 20-11-1999 ஆகும். 05-10-2018 அன்று உள்ள படி அவளுடைய வயதைக் கணக்கிடுக

34) மணிமேகலை ₹25,52,500 இக்கு ஒரு வீட்டை வாங்கி அதைச் சீரமைக்க ₹2,28,350 செலவு செய்தார். அவர் அவ்வீட்டை ₹30,52,000இக்கு விற்றார் எனில் அவரது இலாபம் அல்லது நட்டம் காண்க.

35) வளவன் 24 முட்டைகளை ₹96 இக்கு வாங்கினார். அவற்றில் 4 முட்டைகள் உடைந்து விட்டன. மீதியை விற்பனை செய்ததில் ₹36 நட்டம் எனில் ஒரு முட்டைக்கான விற்பனை விலை எவ்வளவு?

36) 8 செ.மீ, 3 செ.மீ மற்றும் 4 செ.மீ ஆகிய பக்க அளவுகளைக் கொண்டு ஒரு முக்கோணம் அமைக்க இயலுமா?

37) $[(9-4)\times8] + [(8+2)\times3]$ ஐ மரவுரு வரைபடமாக மாற்றுக.

38) ஒரு காகித விற்பனை நிறுவனம் தன்னுடைய இருப்பில் உள்ள 7,50,800 குறிப்பேடுகளில் 6,25,610 குறிப்பேடுகளை ஓர் ஆண்டில் விற்பனை செய்துள்ளது எனில் அந்நிறுவனத்தால் விற்பனை ஆகாத குறிப்பேடுகளின் எண்ணிக்கையைக் காண்க.

## VII. ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2x5=10

39) ஒரு கோடு வரைக. அக்கோட்டிற்கு மேலே 4.8 செ.மீ தூரத்தில் R என்ற புள்ளியைக் குறிக்க. R வழியே அக்கோட்டிற்கு இணைகோடு வரைக.

40) AB = 7 செ.மீ அளவில் ஒரு கோட்டுத்துண்டு வரைந்து கோட்டுத்துண்டின் மீது P என்ற புள்ளியைக் குறிக்கவும். P வழியே AB கோட்டுத்துண்டிற்குச் செங்குத்துக்கோடு வரைக.

41) ஒரு கோடு வரைக. கோட்டிற்குக் கீழே 5.4 செ.மீ தூரத்தில் R என்ற புள்ளியைக் குறிக்க R வழியே அக்கோட்டிற்கு இணைகோடு வரைக.

- - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner